# முதுமொழிக்காஞ்சி கூறும் ஒழுக்கம் - ஒரு தத்துவவியல் நோக்கு

# Ethics of Muthumozhikkānji - A Philosophical View

Ratnasabapathy Premkumar[1]

***Abstract***

*The work, Muthumozhikkānji was comprised in the collection of eighteen lesser works (patiṉeṇkĪḻkkaṇakkunūlkal) emerged in the post Sangam period (period for moral works). It could not be denied the fact that influence of Jainism and Buddhism in the period in which Mudhumozhikkānji emerged in Tamil Nadu. Sangam literature reveals the influence of Vedic culture, a part of Hinduism, among Tamils in the Sangam period. It is worthy to note that Tamils' independent and unique ethical values had not only been articulated by Sangam literature and but also been narrated by the post-Sangam period literature. In this background, ethical views and ideas of Mudhumozhikānji get momentum. This research aims to determine what religious and philosophical ideas have influenced the ethics of Muthumozhikkānji in the period in which many religious-philosophical schools of thought spread in Tamil Nadu. From the beginning, there is a continuous process of dialectic logic, spiritualism vs. materialism as thesis and anti-thesis in Indian philosophical thoughts. To discover what is the position of Muthumozhikkānji on this dialectic process is another significant objective of the research. Apart of this, identifying proto-Vedic and anti-Vedic ideas and finding hierarchical differences between domestic life and ascetic life in Muthumozhikkānji are also objectives of this study. Interestingly, Muthumozhikkānji narrates more materialistic ideas than spiritual ones, and it articulates the significant ethical virtues of Sangam Tamils and utters the influence of Buddhism in the text. It is noteworthy that Muthumozhikkānji narrates ethical thoughts and ideas based on reason and real, which existed in the post Sangam period. It could be found that Muthumozhikkānji tries to reduce hierarchical differences and gaps between domestic and ascetic life. More than one different edition of muthumozhikkānji, literary sources of ethics, Sangam and Post -Sangam literature, Indian Philosophical sources, and online sources were used in this study.*

*Keywords: Buddhism, Ethical values, Materialism, Post –Sangam period, spiritualism*

## 1.அறிமுகம்

தத்துவவியலின் முக்கிய பிரிவாக ஒழுக்கவியல் காணப்படுகின்றது. ஒழுக்கவியல் என்பது ஒழுக்கம், ஒழுக்கப் பிரச்சினைகள், மற்றும் ஒழுக்கத் தீர்ப்புக்கள் தொடர்பான மெய்யியல் சார்ந்த சிந்தனையாகும்.(Frankena, 1989, p. 4) தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க மருவியகாலம் அதிகம் ஒழுக்கவியல் சார்ந்த நூல்கள் எழுந்த காலமாக காணப்படுகின்றது. இக்காலத்தில் எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல் தொகுதிக்குள் அதிகமான நூல்கள் அறம் (ஒழுக்கம்) பற்றி எடுத்துக் கூறுபவை. அவற்றுள் ஒன்றாக முதுமொழிக்காஞ்சி காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அகம்,புறம் என்ற இருவகை இலக்கிய வகையீட்டில் புறம் என்னும் வகையீட்டில் முதுமொழிக்காஞ்சி இடம்பெறுகிறது. சங்ககால புற ஒழுக்க இலக்கியங்களின் இலக்கணங்களை எடுத்துரைக்கும் 'புறப்பொருள் வெண்பாமாலை' எனும் இலக்கண நூலில் காஞ்சி பற்றியும் முதுமொழிக்காஞ்சி பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நிலையாமை மற்றும் வீடுபேறு தொடர்பாக எடுத்துரைக்கும் கருத்துக்கள் காஞ்சி என்னும் பகுதியில் இடம் பெறுகின்றன. காஞ்சியின் பல்வேறு வகைகளில் ஒன்றாகக் கருதப்படும் முதுமொழிக்காஞ்சி

[1] Senior Lecturer, Department of Philosophy & Value Studies, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka. Email: premkumarr@esn.ac.lk

அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருள் தொடர்பாக தெளிவாகக் கூறும் அறிவுடையோரின் கருத்துக்களைக் குறிக்கின்றது. உலகியல் சார்ந்த கருத்துக்கள் மற்றும் ஆன்மீகம் சார்ந்த கருத்துக்கள் என இரு வகை கருத்துக்களையும் முதுமொழிக் காஞ்சி உள்ளடக்குவதைக் காணமுடிகின்றது.

''பலர் புகழ் புலவர் பன்னினர் தெரியும்

உலகியல் பொருள் முடிபு உணரக் கூறின்று.''

(உரை: 'உலகோர் பலரும் புகழுகின்ற அறிவுடையோர்' குற்றம் நீக்கி ஆராய்கின்ற உலகியலுள், முடிந்த பொருளாகிய அறம் பொருள் இன்பத்தை அனைவரும் அறியக் கூறியது முதுமொழிக் காஞ்சி ஆகும்.( கேசிகன், 1963, 30. ப. 248)

இல்லறம், துறவறம் மற்றும் இவை தவிர்ந்த பல ஒழுக்கங்களை இந்நூல் வெளிப்படுத்துகின்றது. நூறு பாடல்களைக் கொண்டு பத்து அதிகாரங்களாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் 10 பாடல்களைக் கொண்டுள்ளது. குறள் தாழிசை என்னும் ஒருவகை பாவினால் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திலும் முதல் பாடல் இரு அடிகளையும் ஏனைய பாடல்கள் ஒரு அடியினையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அன்புமணி, 2007, ப. 82.) இந்நூலினை இயற்றியவர் மதுரை கூடலூர் கிழார் என அறியப்படுகிறார். இந்நூல் திருக்குறளுக்கு அதிக கடன்பட்டுள்ளதாக தமிழறிஞர் வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.( Vaiyapuripillai, 1988,p.67) மேலும் இந்நூலின் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு என குறிப்பிடப்படுகிறது.(மேலது. ப.67) உலகியல் சார்ந்த பொருள்முதல்வாதக் கருத்துக்களையும் ஆன்மீகம் சார்ந்த கருத்துக்களையும் தன்னிடத்தில் கொண்டு காணப்படுகின்ற முதுமொழிக் காஞ்சி திருக்குறளைப் போல் இல்லறம்-துறவறம் என்ற தெளிவான வகையீட்டினைக் கொண்டு காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலின் ஒவ்வொரு அதிகாரமும் பொருள்முதல்வாதக் கருத்துக்களையும் ஆன்மீகம் சார்ந்த கருத்துக்களையும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முதுமொழிக்காஞ்சி உலகியல் சார்ந்த பொருள்முதல்வாதக் கருத்துக்களை அதிகமாகவும் ஆன்மீகம் சார்ந்த கருத்துக்களை குறைவாகவும் கொண்டிருப்பது இந்நூலின் மற்றுமொரு சிறப்பம்சமாகும். இந்நூல் உருவாக்கப்பட்ட காலத்தில் பல்வேறு சமய தத்துவக் கருத்துக்கள் வழக்கில் இருந்த போதிலும் பௌத்த சமய தத்துவக் கருத்துக்களின் செல்வாக்கினை முதுமொழிக்காஞ்சியில் காணக் கூடியதாக இருக்கின்றது. பௌத்த சமயத்தில் பல்வேறு விதமான ஒழுக்கக் கருத்துக்கள் காணப்பட்ட போதும் எண் வகை மார்க்கம் (அட்ட சீலம்) அடிப்படை ஒழுக்கக் கோவையாகும். இல்லறத்தாரும் துறவறத்தாரும் எண் வகை மார்க்கங்களில் கூறப்படுகின்ற ஒழுக்க சீலங்களை பின்பற்றுவதன் மூலம் பௌத்த வீடுபேறாகிய நிர்வாணத்தை அடைய முயல்வர். பௌத்தம் கூறும் எண்வகை மார்க்கங்களில் 5வது மார்க்கமாக இடம் பெறுவது நற்செய்கை ஆகும். நற்செய்கையில் பஞ்சசீலங்கள் கூறப்படுகின்றன. பஞ்சசீலங்கள் ஆவன: கொல்லாமை,காமத்திலிருந்து விலகியிருத்தல், பொய்யாமை, கள்ளாமை மற்றும் கள்ளுண்ணாமை. (வேங்கடசாமி,1940,ப.17) இத்தகைய பஞ்சசீலங்கள் ஆங்காங்கே இந்நூலில் காணப்படுவதை நாம் சுட்டிக்காட்ட முடியும். முதுமொழிக்காஞ்சியில் பஞ்சசீலங்கள் பின்வரும்

பாடல்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. கொல்லாமை(80), காமத்திலிருந்து விலகியிருத்தல்(78), பொய்யாமை(4), கள்ளாமை(69) மற்றும் கள்ளுண்ணாமை(63). கள்ளுண்ணாமையினை தவிர ஏனைய நான்கு சீலங்களையும் சமணமும் பௌத்தமும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சமணமும் இக்காலகட்டத்தில் தமிழ் நாட்டில் செல்வாக்கு செலுத்திய மதமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சமணத்தின் பஞ்ச மகாவிரதங்களுள் கள்ளுண்ணாமைக்குப் பதிலாக உடைமையின்மை எனும் சீலம் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் முதுமொழிக்காஞ்சியில் பௌத்தத்தின் செல்வாக்கை எடுத்துக்காட்டும் கூறாக கள்ளுண்ணாமை காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்நூலில் கடவுள் அல்லது அதற்கு நிகரான வார்த்தையினை ஒரு பாடலிலும் காண முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தனிமனித முயற்சியின் மூலம் விடுதலை அடையும் வழியினை எடுத்துக் கூறுவதாக முதுமொழிக் காஞ்சியின் ஆன்மீகக் கருத்துக்கள் காணப்படுகின்றன. சமண சமய கட்டுப்பாடுகளையும் ஒழுக்க முறைகளையும் இந்து மதத்தின் கடவுள் சார்ந்த கருத்துக்களையும் சடங்கு சம்பிரதாயங்களையும் முதுமொழிக்காஞ்சிப் பாடல்களில் காண முடியவில்லை. பௌத்தத்தின் முக்கிய கொள்கையான கருணை அல்லது இரக்கம் பற்றிய கருத்துக்களை முதுமொழிக்காஞ்சியில் காணக் கூடியதாக உள்ளது.(அருளுடமை: மு.மொ. கா. 12), (Tachibana, 1926,p.184) ஆயினும் ஒப்பீட்டளவில் குறைந்த அளவு ஆன்மீகக் கருத்துக்களையே முதுமொழிக்காஞ்சி கொண்டிருக்கின்றது எனலாம். அதிகமாக முதுமொழிக்காஞ்சி எடுத்துரைக்கும் உலகியல் சார்ந்த பொருள்முதல்வாதக் கருத்துக்களில் சமய சார்புகளைக் காணமுடியவில்லை என்ற கருத்தினையும் நாம் இங்கு கூறியாக வேண்டும். அதிக அளவில் உலகியல் சார்ந்த ஒழுக்கங்களில் சமய சார்பற்றத் தன்மையினை சங்க மருவிய காலத் தமிழர்கள் பின்பற்றியமை இதற்கு தக்கச் சான்றாகும். உலகியல் சார்ந்த பொருள் முதல் வாதக் கருத்துக்களை இல்லறத்திற்குரிய ஒழுக்க சீலங்களாக கருத முடியும். இத்தகைய ஒழுக்க சீலங்கள் அதிக அளவு பகுத்தறிவு மற்றும் நேர்காட்சிவாத அடிப்படையினைக் கொண்டிருக்கின்றதே தவிர பௌதீக அதீத தன்மையினைக் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காலங்காலமாக பின்பற்றப்பட்டு வருகின்ற மரபு என்ற வகையில் எல்லா ஒழுக்கவியல் சார்ந்த கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளாமல் பகுத்தறிவு ரீதியாக அவற்றை ஆராய்ந்து சிலவற்றை ஏற்றும், சிலவற்றை நிராகரிக்கும் பண்புடைய சமுதாயமாக தமிழர் சமுதாயம் இருந்துள்ளது என்பதை முதுமொழிக்காஞ்சியின் ஒழுக்கவியல் சிந்தனைகள் எடுத்தியம்புகின்றன. சங்கமருவிய காலம் அறநூற் காலம் எனக் கருதப்பட்ட போதும் பொருள் முதல் வாதம் மற்றும் இன்ப வாதம் தொடர்பான கருத்துக்கள் பற்றி அதிகம் பேசுவதாக முதுமொழிக்காஞ்சி காணப்படுகின்றது. இது அதன் தனித்துவமான தன்மையினை வெளிப்படுத்துகின்றது. திருக்குறளிலும் நாலடியாரிலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள பொருள் முதல் வாதம் மற்றும் இன்ப வாதம் தொடர்பான கருத்துக்கள் முதுமொழிக்காஞ்சியில் அதிக முக்கிய இடத்தை பெற்று விளங்குவதைக் காணலாம்.

**2.ஆய்வு முறையியல்**

ஆய்வு முறை என்றவகையில் மெய்யியலுக்கேயுரிய ஆய்வுமுறையான நம்பிக்கைகள் பற்றிய விமர்சன ரீதியான மதிப்பீட்டு முறை மற்றும் எண்ணக்கருக்களின் தெளிவுபடுத்துகை முறை, பகுப்பாய்வு முறை, தொகுப்பு முறை, ஒப்பீட்டு முறை, விமர்சன மற்றும் முழுமை முறை என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஆய்வுடன் தொடர்புபட்ட மூலநூல், மூலநூல் தொடர்பாக வெளியிடப்பட்ட பல்வேறு உரைநூல்கள், ஆய்வுத் தலைப்புடன் தொடர்புபட்ட தத்துவ நூல்கள், இலக்கிய நூல்கள் மற்றும் இணையதள மூலங்கள் இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**3. பெறுபேறும் கலந்துரையாடலும்**

**3.1.ஒழுக்கமே முதன்மையானது**

உலகிலுள்ள எல்லாவற்றையும் விட ஒழுக்கமே முதன்மையானது என்ற கருத்தினை வலியுறுத்துவதாக முதுமொழிக்காஞ்சியின் பாடல் வரிகள் காணப்படுகின்றன. பலர் உயர்ந்த கல்வியறிவுடைய மேதைகளாக இருக்கலாம் ஆனால் அவர்கள் நல்லொ ழுக்கமுள்ளவர்களாக இருப்பார்களா? என்ற கேள்வி எழுப்பப்பட்டு ஒருவன் உயர்ந்த கல்வி அறிவினை கொண்டிருப்பதைக் காட்டிலும் அவன் ஒழுக்கமாக நடத்தலே உயர்வானது என்ற கருத்து வற்புறுத்தப்படுகிறது.('ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை'(மு.மொ.கா.1) ஒழுக்கம் தொடர்பான கருத்துக்களை ஒருவன் கற்றிருந்த போதும் அதன்படி நடத்தல் கடினமானது என்பதை பண்டைய தமிழ் மக்கள் உணர்ந்திருந்தனர். உயர்ந்த விடயங்களை ஒருவன் கற்பதனால் மட்டுமே உயர்ந்தவன் ஆகிவிட மாட்டான். உண்மையில் அவற்றை பின்பற்றுவதன் மூலமே அவன் உயர்ந்தவன் ஆகின்றான் என்ற கருத்தினை முதுமொழிக்காஞ்சி தெளிவாக எடுத்துரைக்கின்றது.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக' (குறள்.391)

என்ற குறளுடன் இக்கருத்தினை ஒப்பிட முடியும். மேலும் நடைமுறை வாழ்க்கையில் ஒருவனுக்கு அவனது கல்வியினாலோ அல்லது குலத்தினாலோ மட்டும் புகழ் ஏற்படுவதில்லை. இதற்கு அப்பால் அவனது செயல்களே சமுதாயத்தில் உயர்ந்த நிலையினை தீர்மானிக்கும் முக்கிய காரணியாக விளங்குகின்றது என்ற கருத்தினை முதுமொழிக்காஞ்சி எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. ஒழுக்கம் தொடர்பாக இது ஒரு புரட்சிகரமான கருத்தாகும். இந்திய துணைக்கண்டத்தில் முதல்முறையாக ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு உயர்ந்த மனிதன், தாழ்ந்த மனிதன் என்ற கட்டளைக் கல்லை பௌத்த சமயமே உருவாக்கியது. பௌத்த சமயத்தின் புனித நூலாகிய தம்ம பதம்(அறநெறி) 'ஒருவன் பிறப்பினால் அந்தணனாக மாட்டான் மாறாக செயலினால் அந்தணனாவான்'(Radhakrishnan,1950, p.180.) எனக் குறிப்பிடுகின்றது. முதுமொழிக்காஞ்சியின் ஒழுக்கம் பற்றிய கருத்துக்கள் மேற்குறிப்பிட்ட தம்மபத வரிகளை ஞாபகப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. கல்வியிலும் குடியிலும் உயர்ந்த

நிலையினை உடையவர்கள் பசுத்தோல் போர்த்திய புலிகளாகவும் கயவர்களாகவும் இருப்பதை தயக்கமின்றி ஏற்றுக் கொள்ளும் முதுமொழிக்காஞ்சி, ஒழுக்கமாக வாழ்தலை கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவதைக் காட்டிலும் உயர்வானதாகக் கருதுகின்றது. முதுமொழிக்காஞ்சி ஒழுக்கத்தினைப் பொறுத்தவரையில் பௌதீகஅதீதம் சார்ந்த அடிப்படையினைக் காட்டிலும் அதிகம் யாதார்த்தம் மற்றும் பகுத்தறிவு சார்ந்த கருத்தினை வெளிப்படுத்துவதனைக் காணக் கூடியதாக உள்ளது. ஒருவன் வசதியும் செல்வாக்கும் உடைய செல்வந்தனாக வாழ்வதைக் காட்டிலும் உண்மை பேசி வாழ்தல் உயர்வானது எனக் குறிப்பிடுகின்றது.(மு.மொ.கா.4) இதேபோல் சான்றோர்கள் செய்யக்கூடிய, செய்யக் கூடாத செயல்களைச் செய்து விட்டால் வெட்கப்படுவர். இத்தகைய வெட்கம் ஒருவனின் புற அழகு, உடல் அழகு மற்றும் இளமை அழகு என்பவற்றைக் காட்டிலும் உயர்வானது என்ற கருத்தினை எடுத்துக் கூறுவதன் மூலம் முதுமொழிக்காஞ்சி உயர்ந்த ஒழுக்க வாழ்க்கையின் மேன்மையினை எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது.(மு.மொ.கா.6) இதே போல் உயர்ந்த குலத்தில் பிறந்ததால் மட்டும் ஒருவன் உயர்ந்தவனாக மாட்டான். அவன் சிறந்த கல்வியை பெறுவதன் மூலம் உயர்ந்தவனாக மாறுவான் என்ற மரபுக்கு எதிரான கருத்தினை முதுமொழிக்காஞ்சி எடுததுரைக்கின்றது.( மு.மொ.கா.7) ஆயினும் இக்கருத்து சங்க நூல்களில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.(புறம். 183.) கல்வி ஒருவனது சமூக அந்தஸ்தினை தீர்மானிக்கும் முக்கிய கூறாக தமிழர் மரபில் காணப்பட்டுள்ளமை ஆரம்ப காலத் தமிழர்களின் தாராண்மைவாத மற்றும் மனிதாபிமான நோக்கிற்கு தக்கச் சான்றாகும். முதுமொழிக்காஞ்சியும் ஒழுக்கஞ் சார்ந்த வகையில் இத்தகைய பகுத்தறிவு சார்ந்த நோக்கினை வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் அருளுடைமை என்ற ஒழுக்க சீலம் பிற்கால பௌத்தத்தில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. அருளுடைமை பற்றிய கருத்துக்களை பௌத்த தமிழ் இலக்கியமான மணிமேகலை எடுத்து விளக்குவதைக் குறிப்பிடலாம். ஒருவன் உயர்குலமா? தாழந்த குலமா? என்பதை அறிவதற்கு உரிய அளவுகோலாக அருளுடைமையினை எடுத்துக் கொள்வது குறிப்பிடத்தக்கது. உயர்குலத்தில் பிறந்தவன் அருளுடைமையினை வெளிப்படுத்துவான் என்றும் தாழ்ந்த குலத்தில் பிறந்தவன் செருக்கினை வெளிப்படுத்துவான் (மு.மொ.கா.11,16) என்றும் குறிப்பிடும் முதுமொழிக்காஞ்சி ஆசிரியர் ஒருவனது செயலும் குணமுமே அவன் உயர்ந்தவானா? தாழ்ந்தவனா? என்பதை தீர்மானிக்கும் என்ற கருத்தினை மீண்டும் உறுதிப்படுத்துகின்றார்.

பௌத்தர்களின் முக்கிய ஒழுக்க வகையீடான பஞ்சசீலங்களில் ஒன்றான கள்ளுண்ணாமை தொடர்பாக முதுமொழிக்காஞ்சி பேசுகின்றது. பல ஒழுக்கத் தவறுகளுக்கு காரணமாக இருக்கும் ஒரு பெரிய ஒழுக்கத் தவறாக கள்ளுண்ணுதல் இருப்பதை முதுமொழிக்காஞ்சி சரியாக அடையாளம் காண்பது குறிப்பிடத்தக்கது.(மு.மொ.கா.63)சங்க கால மக்களுக்கு கள்ளுண்ணுதல் ஒழுக்கத் தவறாகத் தோன்றவில்லை. (புறம்.361) ஆனால் பௌத்தம் இதனை ஒரு முக்கிய பிரச்சினையாக எடுத்துக் கொள்கின்றது. பௌத்தத்தின் செல்வாக்கினால் கள்ளுண்ணாமை சீலம் முதுமொழிக்காஞ்சியில் எடுத்துரைக்கப்பட்டிருக்கலாம். பிறரிடம் பணிவும் அடக்கமும் இல்லாதவர்கள் பெருமையும் புகழும் பெறமாட்டார்கள்(மு.மொ.கா.67). முதுமொழிக்காஞ்சியின் இந்த கருத்து வள்ளுவர் குறிப்பிடும் செல்வந்தர்களுக்கு பணிவு ஒரு மேலதிகச்

செல்வமாகும்(குறள்-125) என்ற கருத்துடன் உடன்பட்டுச் செல்வதைக் காணலாம். ஒரு அரசனின் ஒழுக்கம் நீதியான ஆட்சியாகும். நீதியற்ற ஆட்சி வறுமைக்கு இட்டுச் செல்லும் என்ற அரசியல் ஒழுக்கத்தினையும் முதுமொழிக்காஞ்சி எடுத்துரைக்கின்றது. (மு.மொ.கா.81) ஒழுக்கம் எனும் போது பகுத்தறிவு மற்றும் உலகியல் சார்ந்த ஒழுக்க சீலங்கள் அதிகம் முக்கியத்துவம் பெறுவதையும் ஆன்மீகம் மற்றும் பௌதீக அதீதம் சார்ந்த ஒழுக்க சீலங்கள் குறைந்தளவு முக்கியத்துவம் பெறுவதனையும் காணக் கூடியதாக உள்ளது.

### 3.2. பொருள்முதல்வாதமும் முதுமொழிக்காஞ்சியும்

பொருள்முதல்வாதக் கருத்துக்களுக்கும் ஆன்மீக கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் வழங்கும் நூலாக முதுமொழிக்காஞ்சி திகழ்கின்றது. இவ்வுலக வாழ்க்கையை பெறுமதிமிக்க ஒன்றாகவே இது கருதுகின்றது. பௌத்தம், சமணம் போன்ற மதங்கள் இவ்வுலகில் இருந்து விடுபடுவதற்கான அறங்களை கூறுவதுடன் இவ்வுலக வாழ்க்கையினை பெறுமதிமிக்க ஒன்றாகக் கருதவில்லை. இவ்வுலக இன்பங்கள், பந்தபாசங்கள் போன்றவற்றிலிருந்து விடுபட்டு நிர்வாணம் அல்லது சொர்க்கம் போன்றவற்றை அடைய வேண்டும் என வற்புறுத்தி வந்துள்ளன. பொருள்முதல்வாத மற்றும் இன்ப வாத வாழ்க்கை முறைமையினை அவை குறைத்தே மதிப்பிட்டுள்ளன. அவற்றின் நோக்கம் ஆன்மீக விடுதலை இதனை அடைய இவ்வுலக வாழ்க்கையினை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டன. இத்தகைய பிற்புலத்தில் முதுமொழிக்காஞ்சி ஆன்மீகம் சார்ந்த, அவ்வுலகம் சார்ந்த ஒழுக்க நியமங்களை எடுத்துரைத்த போதிலும் உலகியல் சார்ந்த, பொருள்முதல் வாதஞ் சார்ந்த கருத்துக்களையும் எடுத்துரைப்பதில் பின் நிற்கவில்லை என்பது இந்நூலின் தனிச் சிறப்புகளில் ஒன்றாகும். இவ்வுலக வாழ்க்கையை இன்பமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும் என்பதில் முதுமொழிக்காஞ்சி மிகவும் உறுதியாக இருக்கின்றது. முதுமொழிக்காஞ்சியில் துறவறம் அல்லது ஆன்மீகம் எந்தளவு முக்கியத்துவம் பெறுகின்றதோ அந்தளவு தூரம் அல்லது அதை விட அதிகமாக பொருள் முதல் வாதம் சார்ந்த வாழ்க்கையும் இன்ப வாதம் சார்ந்த வாழ்க்கையும் முக்கியத்துவம் பெறுவதை முதுமொழிக்காஞ்சியின் பாடல்கள் மூலம் அறியலாம். இவ்வுலகில் மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்ற பொருள் முதல் வாத மற்றும் இன்ப வாதச் சிந்தனை நோக்கினை வலியுறுத்துவதாக ஒழுக்கங்களையும் கருத்துக்களையும் முதுமொழிக்காஞ்சி முன்வைக்கின்றது. திருக்குறள் மற்றும் நாலடியார் போல் இல்லற வாழ்க்கையினை இரண்டாம் நிலைக்குத் (துறவற வாழ்க்கை முதன்மை நிலை) தள்ளுவதையோ அல்லது இல்லற வாழ்க்கை அல்லது உலகியல் சார்ந்த வாழ்க்கையினை துறவற வாழ்க்கையினைச் சிறப்பாக வாழ்வதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்துதல் போன்ற நோக்குகளைக் காண முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நாம் எமது உடலை நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பழமொழியை பிரதிபலிப்பதாக இந்நூலின் கருத்துக்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இவ்வுலக வாழ்க்கையினை மகிழ்ச்சியாக வாழ்வதற்கு உடல் எவ்வளவு முக்கியம் என்பதை முதுமொழிக்காஞ்சி எடுத்துரைக்கின்றது. மேலும் உடல் நலனை வற்புறுத்துவதன் காரணமாக உடல் மூலம் கிடைக்கும் இன்பம் என்பதை பிரதான இலக்காக முதுமொழிகாஞ்சி எடுத்துக் கொள்கின்றது என்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு முக்கிய விடயமாகும்.

'பிணிகிடந்தோன் பெற்ற இன்பம் நல் கூர்ந்தன்று',

'மிகமூத்தோன் காம நல் கூர்ந்தன்று.' (மு.மொ.கா.84,82)

உணவை குறைத்தால் நோய் வராது என்ற கருத்தினை முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுகிறது. இன்று உலகம் நோயினால் பெரும் துன்பங்களை சந்தித்து வருகின்றது. உணவை குறைத்துக் கொள்வதே நோயிலிருந்து விடுபட ஒரே வழி. இந்த கருத்தினை முதுமொழிக்காஞ்சி எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. (மு. மொ. கா. 77)

அடுத்ததாக புகழ்; முதுமொழிக்காஞ்சி குறிப்பிடும் முக்கிய விடயங்களுள் ஒன்றாக இருக்கின்றது. புகழ் என்பது உலகியல் சார்ந்த வாழ்க்கைக்குரிய ஒழுக்கமாக இருப்பதுடன் ஒவ்வொருவரும் அதனை அடைய முயற்சி செய்யவேண்டும் என்ற கருத்தினையும் அது வெளிப்படுத்துகிறது. ஒருவன் ஒரு செயலை திறம்பட செய்து முடிக்க வேண்டும். அப்போதுதான் அவனுக்கு புகழ் ஏற்படும் என்றும் செல்வத்தினை அதிகரிக்க விரும்புபவர்கள் புகழ் தரக் கூடிய செயல்களைச் செய்தல் வேண்டும் போன்ற கருத்துக்களை முதுமொழிக்காஞ்சி எடுத்துரைக்கின்றது.(மு.மொ.கா.92)இவ்வகையில் இவ்வுலக வாழ்க்கையில் புகழ் எவ்வளவு முக்கியம் என்பதை முதுமொழிக்காஞ்சி ஆரம்பகாலத் தமிழர்களைப் பின்பற்றி தனது கருத்தினை முன் வைப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வுலக வாழ்க்கையில் ஒருவன் அடையக்கூடிய விழுமியங்களுள் மிக உயர்ந்த ஒன்றாக புகழ் காணப்படுகின்றது. புறநானூறும் திருக்குறளும் கூட புகழின் முக்கியத்துவத்தினை எடுத்துரைக்கின்றன. (புறம் 24., குறள். 236,). இதே பாதையில் முதுமொழிக்காஞ்சியும் செல்வது என்பது குறிப்பிடத்தக்கது. ஆன்மீக வாழ்க்கையில் விடுதலை எவ்வாறு முக்கியத்துவமுடைய விடயமாக உள்ளதோ அவ்வாறே உலகியல் சார் வாழ்க்கையில் புகழ் இலக்காக இருக்க வேண்டும் என முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுகின்றது.(இசையில் பெரியதோர் எச்சம் இல்லை.- மு.மொ.கா.58)

எதற்கும் அஞ்சாமை, மரணத்தை கண்டு எள்ளி நகையாடுதல் போன்ற தீவிர வீரப்பண்புகளை முதுமொழிக்காஞ்சி சங்க இலக்கியங்களை போல் போற்றவில்லை. ஒரு வீரன் எதற்கு பயப்பட வேண்டுமோ அதற்குப் பயப்பட வேண்டும் எல்லா விடயங்களுக்கும் பயப்படாமல் இருக்கக் கூடாது. இப்படி பயப்படாமல் இருக்கும் வீரனை ஆண்தன்மையில்லாத பேடிக்கு ஒப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. (மு.மொ.கா.32) சங்க காலத்தின் 'வீரம்' என்ற எண்ணக்கருவில் மாற்றத்தினை கொண்டுவருவதாக முதுமொழிக்காஞ்சியின் வீரம் பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன. முதுமொழிக்காஞ்சி குறிப்பிடும் வீரம் பகுத்தறிவு மற்றும் புத்திசாலித்தனம் என்பவற்றை உள்ளடக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை மனிதன் மானத்துடன் வாழ வேண்டும் என்ற சங்க கால தமிழர்களின் ஒழுக்க மாண்பினையும் முதுமொழிக்காஞ்சி எடுத்துக் காட்டத் தவறவில்லை. இதே கருத்தினை திருக்குறளும் எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது.(குறள்.969) மானமின்றி வாழும் வாழ்க்கை எப்படியானது என்பதை உவமை மூலம் விளக்குகின்றது. எவ்வாறு பசியுடன் இருப்பவன் அமைதியின்றி இருப்பானோ அவ்வாறே மானமின்றி வாழ்பவன் அமைதியின்றி இருப்பான் என அவனது உளவியல் சார்ந்த நிலையினை முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுகின்றது.(மு.மொ.கா.33)

பௌத்த மதம் கூறுவது போல் மூப்பு, பிணி, சாக்காடு போன்ற மனித வாழ்வின் அவலங்களை இந்நூல் பிரதிபலித்த போதிலும், துன்பங்களை மனிதன் கடந்து செல்ல வேண்டும் என்ற பகுத்தறிவு சார்ந்த பொருள்முதல்வாத நோக்கினை முதுமொழிக்காஞ்சி வெளிப்படுத்தத் தவறவில்லை. மூப்பினை கோபத்திற்கும் சீறுகின்ற பாம்புக்கும் முதுமொழிக்காஞ்சி ஒப்பிடுகிறது. முதுமொழிக்காஞ்சி உளவியல் ரீதியாகவும் யதார்த்த ரீதியாகவும் மூப்பினை நோக்குகின்றது. இது முதுமொழிக் காஞ்சியின் தனித்தன்மையினைக் காட்டுகிறது. (மு.மொ.கா.39) பொருள் முதல் வாத அல்லது இன்பவாத நோக்கில் 'மூப்பு' மிகவும் பயங்கரமான ஒன்றாகும். மூப்படைந்தவன் இவ்வுலக இன்பத்தை அடைய முடியாது. இத்தகைய நோக்கினை முதுமொழிகாஞ்சியின் மூப்பு பற்றிய நோக்கான 'இழிவுடை மூப்பு…' (மு.மொ.கா.39) என்ற தொடர் வெளிப்படுத்துகின்றது.

பகுத்தறிவுள்ள மனிதன் நாட்டு நடப்பு மற்றும் யதார்த்தம் என்பவற்றை புரிந்து கொண்டவனாக இருப்பான். இத்தகைய ஆளுமை கொண்ட ஒருவன் ஒரு வகையில் சிறந்த அறிவாளி. இவன் குறிப்பிட்ட சமூகத்தில் அல்லது குறிப்பிட்ட நாட்டில் எவை சரியானதாகக் கருதப்படுகின்றனவோ அத்தகைய செயல்களைச் செய்வான், எவை தவறானதாக கருதப்படுகின்றனவோ அத்தகைய செயல்களைச் செய்யமாட்டான். இத்தகைய அறிவினை உடையவனை போற்றும் முதுமொழிக் காஞ்சி இவனை ஒப்புரவு அறிவுடையவன் என்றும் இவன் செய்யும் செயல் சரியான செயல் என்றும் குறிப்பிடுகின்றது. (மு.மொ.கா.52). ஒழுக்கவியலின் ஒரு கொள்கையாக விளங்கும் சார்புவாதக் கொள்கையுடன் இத்தகைய நோக்கு இணைந்து செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது. சார்பு வாத ஒழுக்கக் கொள்கையின் படி சரியான செயல், தவறான செயல் என்பன நாட்டுக்கு நாடு, சமூகத்திற்குச் சமூகம் மற்றும் காலத்திற்குக் காலம் மாறுபடும் என்பதுடன் மாறாத என்றுமுள்ள ஒழுக்க மதிப்பீடுகள் என்று எவையும் இல்லை. ஒழுக்க ரீதியாக இத்தகைய சார்பு வாதச் சிந்தனைகளை முதுமொழிக் காஞ்சி கொண்டிருப்பதை சுட்டிக் காட்டலாம். முதுமொழிக் காஞ்சி குறிப்பிடும் 'ஒப்புரவு அறிவு' என்பது சார்பு வாதச் சிந்தனையாகும்.

காலந் தவறி கடமைச் செய்பவர்கள், எதிர் கால விளைவுளை கருத்திற் கொள்ளாமல் செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாதவர்கள் உயர்ந்த நிலையினை அடைய மாட்டார்கள் என உலகியல் சார்ந்த ஒழுக்க விழுமியங்களை முதுமொழிக் காஞ்சி குறிப்பிடுகின்றது. (மு.மொ.கா.64,65,66)

முதுமையில் காம உணர்ச்சி இன்பம் தராது என்று கூறுவதன் மூலமும் முதுமை பருவத்தில் அணிகலன்களை அணிவது அழகைத் தராது என்று கூறுவதன் மூலமும் காம இன்பத்தை வேண்டுவோன் குறிப்பறிதல் திறனைக் கொண்டிருக்கவேண்டும் என அறிவுரை கூறுவதன் மூலமும் ஆரம்ப காலத் தமிழர்கள் எந்தளவு தூரம் பொருள் முதல் வாதம் மற்றும் இன்ப வாதச் சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியிருந்தார்கள் என்பதை முதுமொழிக் காஞ்சி வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. (மு.மொ.கா.82,86,100) அனைவரும் தவறு செய்கின்றோம் தவறு செய்யாதவர்கள் இருக்க முடியாது என்ற வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தினை புரிந்து கொண்டு எல்லோரையும் குற்றம் கூற ஆரம்பித்தால் அனைவரும் எதிரிகள் ஆகிவிடுவர். ஆகையால் பிறரது குற்றங்களை கண்டுகொள்ளாது அவர்களது நல்ல விடயங்களை மட்டும் எடுத்துக் கூறுவதன் மூலம் அறிவாளி வாழ்வில் முன்னேறி விடுவான் என்ற வாழ்க்கையின் வெற்றி மந்திரத்தினை முதுமொழிக்காஞ்சி எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. (மு.மொ.கா.91)

எந்தளவு தூரம் ஆரம்ப காலத் தமிழர்கள் யதார்த்தவாதிகளாக இருந்துள்ளனர் என்பதை மேற்குறிப்பிட்ட நோக்கு தெளிவுப்படுத்துகின்றது.

### 3.3. ஈகை அறமும் முதுமொழிக்காஞ்சியும்

கொடையாக வேண்டுவோர்க்கு பொருட்களை வழங்குதலை முக்கிய ஒழுக்க சீலமாக முதுமொழிக்காஞ்சி கூறுகின்றது. தமிழர்களின் மரபொழுக்கமாகவும் ஈகை விளங்குவது குறிப்பிடத்தக்கது. சங்க கால இலக்கியங்களில் ஈகை தொடர்பாக பல பாடல்களை சுட்டிக் காட்ட முடியும்.(புறம்.108.) இரக்கமற்ற மனம் கொண்டவர்களை கடின பாலை நிலத்திற்கும் பாறைக்கும் ஒப்பிடுவது போல் இரக்க குணம் உள்ளவர்களின் மனம் ஈரத்தன்மைக்கு ஒப்பிட ப்படுகின்றது. ('ஈரமுடைமை ஈகையின் அறிப.') ஈரமுள்ள நிலத்தில் பயிர்கள் விளைவது போல் இரக்கமுள்ள மனத்தில் பிறர் நலனை விரும்பும் சிந்தனைகள் காணப்படும் எனவும் ஒருவரது குலமும் குணமும் ஈகையால் அறியப்படும் என முதுமொழிக்காஞ்சி நம்புகின்றது. (மு.மொ.கா.11,12) பிறருக்கு கொடுப்பதற்காகவே செல்வம் படைக்கப்படுகின்றது. செல்வம் இருந்தும் அதனைப் பிறருக்கு வழங்காதவன் வறுமையுற்றவன் என அடையாளப்படுத்துகின்றது முதுமொழிக்காஞ்சி.( (மு.மொ.கா.31)

ஒழுக்கவியலாளர்கள் ஒருவரது செயல் எப்போது அவரது பூரண விருப்பத்துடன் செய்யப்படுகின்றதோ அப்போதுதான் அதனை ஒழுக்கச் செயலாகக் கருதுவர். இத்தகைய பிற்புலத்தில் அச் செயலின் பலனுக்கு அவர் முழுமையாக பொறுப்பாக இருப்பார். அவ்வாறு அல்லாத செயல்கள் அவருடைய செயல்களாகக் கருதப்படமாட்டாது. இத்தகைய செயல்களை சுயாதீன சித்தத்துடன் (free will) செய்யப்படும் செயல்கள் என்பர். இத்தகைய கருத்து ஒழுக்கவியலில் மிக முக்கியமான ஒன்றாகும். முதுமொழிக் காஞ்சியில் ஈகை ஒழுக்க சீலத்துடன் தொடர்புபட்ட வகையில் இக்கருத்து காணப்படுவது குறிப்பிடத்தக்கது. ஒருவர் தனது பூரண விருப்பத்துடன் கொடை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கா விட்டால் அது கொடையாகக் கருதப்படமாட்டாது. மாறாக அது கொடைக்கு எதிர்மறைத் தன்மையுடைய செயலாகக் கருதப்படும். (ஈயாமை- மு.மொ.கா.34) போலியாகக் கொடை வழங்குவதைப் போல நடித்தல் கீழான குணமாகும், கொடை வழங்காதவர்களுக்கு புகழ் இல்லை, கொடையினை அதற்குரிய முறையில் வழங்க வேண்டும், பொருள் வழங்கத் தகுதி இருந்தும் பிறகு வழங்காமல் இருப்பது பெரிய கொடுமையாகும்,வறுமையுடையவனுக்கு ஒன்றைக் கொடுப்பதால் ஒருவன் உயர்வடைகிறான், அதிக அன்புடையவர்களுக்கு கொடை வழங்குதல் எளிதானது (மு.மொ.கா.36,44,48,55,60,73) போன்ற ஈகையுடன் தொடர்புபட்ட கருத்துக்களை எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. பௌதீக அதீத அடிப்படையின் செல்வாக்கு ஈகை ஒழுக்க சீலத்தை பொறுத்தவரையில் மிகவும் குறைவாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சங்க மற்றும் சங்கமருவியகால தமிழ் சமுதாயத்தில் ஈகை அறம் முக்கியத்துவம் உடையதாகக் கருதப்பட்ட போதிலும் கொடையினை பெறுபவர்கள் (இரப்போர்) தமிழ் மரபில் மிகவும் தாழ்ந்தவர்களாகவே கருதப்பட்டனர். ஏனெனில் ஒருவன் ஒருவரிடம் சென்று பொருளுக்காக இரத்தல் என்பது அவமானமான விடயமாகவே தமிழ் சமுதாயத்தில் கருதப்பட்டு

வந்துள்ளது. திருக்குறள் உட்பட சங்க தமிழ் நூல்களில் இக்கருத்து ஆழமாக பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இரத்தலை விட ஒரு இழிவான விடயம் என்று ஒருவனுக்கு எதுவும் இருக்க முடியாது என்ற கருத்தினை முதுமொழிக்காஞ்சி எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. இங்கு ஈகை ஒழுக்க சீலம் ஒரு வகை முற்சாய்வுடன் செயற்படுவதைக் காணமுடிகின்றது.

'இரத்தலின் ஊஉங்கு இளிவரவு இல்லை.' (மு.மொ.கா.59)

திரைகடல் ஓடி திரவியம் தேடுவதும் தேடிய பொருளை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பகிர்ந்து வழங்குதலும் தமிழர்களின் பழைய மரபாகும். இந்த அடிப்படையில் ஒருவர் பிறர்க்கு தேவையானவற்றை கொடுப்பதற்கு தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை ஆரம்ப காலத் தமிழர்களின் எதிர்பார்ப்பாக இருந்துள்ளது என்பதை முதுமொழிக்காஞ்சி உறுதி செய்கின்றது.

### 3.4. நட்பும் முதுமொழிக்காஞ்சியும்

நட்பு எனும் ஒழுக்க சீலம் ஆரம்ப கால தமிழர்கள் மத்தியில் அதிக முக்கியத்துவம் உடைய ஒழுக்கமாக பின்பற்றப்பட்டு வந்துள்ளது. முக்கியமான தருணத்தில் ஆபத்துக்காலத்தில் உண்மையான நட்பு வெளிப்படும், நட்பானது ஒரே தன்மையினதாக எப்போதும் இருக்க வேண்டும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மாறக் கூடாது, அறிவில்லாத நண்பனின் துணையினைக் காட்டிலும் தனியாக இருப்பதே மேலானது, உண்மையான நட்பில் அன்பு கலந்திருக்கும், ஒரு துரோகியினை நண்பனாகக் கருதி வாழும் வாழ்க்கையானது ஒருவன் ஏழ்மையில் வாழ்வதற்கு சமமானதாகும், நட்பு இல்லாதப் பட்சத்தில் உதவியினைப் பெறல் சிரமமான காரியமாகும் போன்ற நட்பு பற்றிய முக்கிய கருத்துக்களையும் நல்ல நட்பின் இலக்கணங்களையும் முதுமொழிக்காஞ்சி எடுத்துரைக்கின்றது. (மு.மொ.கா.37,38,43,83,90)

### 3.5. சான்றாண்மையும் முதுமொழிக்காஞ்சியும்

சங்க இலக்கியங்களில் உயர்ந்த மனிதனுக்குரிய (சான்றோர்கள்) பண்புகள் பல இடங்களில் பேசப்பட்டுள்ளன. குறிப்பாக எட்டுத் தொகை பத்துப் பாட்டு இலக்கியங்களில் ஆங்காங்கே விரவிக்கிடக்கின்றன. சங்கமருவிய கால நூல்களான திரிகடுகம் முதலான நூல்களும் சான்றாண்மை பற்றிப் பேசுகின்றன. முதுமொழிக் காஞ்சியில் சான்றோர்களுக்குரிய பண்புகளை பல இடங்களில் அவதானிக்க முடிகின்றது. சான்றோர் பற்றிய முதுமொழிக்காஞ்சியின் கருத்துக்கள் ஏனைய சங்க மற்றும் சங்கமருவிய கால நூல்களிலிருந்து வேறுபட்டு தனித்தன்மையுடன் காணப்படுவதைச் சுட்டிக் காட்டலாம். சிலருக்கு எத்தகைய அறக்கருத்துக்களை எடுத்துக் கூறினாலும் அவர்கள் அக்கருத்துக்களை ஏற்றுச் செயல்படமாட்டார்கள். அவர்களது இயல்பினை மாற்றுவது கடினம். இவ்வாறு ஒழுக்கத்துக்கு கட்டுப்படாது நடப்போரை 'யாப்பிலோர்,' 'சிறியோர்' என முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுகின்றது. இத்தகைய மனிதர்களை சான்றோர்கள் கண்டிக்க மாட்டார்கள் ஏனெனில் அவர்கள் ஒருபோதும் திருந்தப் போவதில்லை என்ற யதார்த்த உண்மையை முதுமொழிக்காஞ்சி எடுத்துரைக்கின்றது.( மு.மொ.கா.21,30) இதேபோல் பெருமைக்குரிய விடயங்களை சான்றோர் குறைத்துப் பேச மாட்டார்கள், ஒரு விடயத்தின் பெருமையை உணர்ந்து அதற்கு மதிப்பு கொடுப்பார்கள், ஒரு

செயல் முற்றுப்பெறாத போது அது சிறப்பாக இறுதியில் முற்றுப் பெறவேண்டும் என்ற நோக்கில் அச்செயல் தொடர்பாக எதிர்மறைக் கருத்துக்களை கூறமாட்டார்கள் போன்ற சான்றோர்களின் பண்புகளை எடுத்துரைக்கின்றது. (மு.மொ.கா.23,24,25)

சங்க காலத்தில் மானத்திற்காகவும் வீரத்திற்காவும் போராடி உயிரை விடும் சான்றோர்களை காணமுடிந்தது. திருக்குறளிலும் மானம், புகழ் போன்ற அதிகாரங்களில் மேற்குறிப்பிட்ட சான்றோர்களுக்குரிய பண்புகளைக் காணலாம். வீரம்,மானம் என்பவற்றைக் காட்டிலும் அதிக புத்திசாலித்தனமுள்ள பண்புகளைக் கொண்ட சான்றோர்கள் பற்றி முதுமொழிக் காஞ்சி குறிப்பிடுகின்றது. அநீதியான மன்னன் சான்றோர்களின் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தி விடலாம் என்ற காரணத்தினால் இத்தகைய மன்னனின் ஆட்சியை அவன் நாட்டிலிருந்து கொண்டே சான்றோர்கள் கண்டிக்க மாட்டார்கள் என முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுகின்றது. ( ‘முறையில் அரசர் நாட்டிருந்து பழியார்’-மு.மொ.கா.26) முதுமொழிக்காஞ்சி குறிப்பிடும் சான்றோர்கள் எப்போதும் நேர்மையாக மட்டும் நடப்பார்கள் என்று கூற முடியாது. ஆனால் பகுத்தறிவு நிரம்பியவர்களாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மேலும் பிழைகளையும் குறைகளையும் பலரிடம் காண்பது ஒரு சிறப்பான பண்பல்ல அது ஒருவரை பலருக்கு எதிரி ஆக்கிவிடும் செயற்பாடாகும் என்பதை உணர்ந்தவர்களாக முதுமொழிக்காஞ்சி குறிப்பிடும் சான்றோர்கள் உள்ளனர். வள்ளுவர் கூறுவது போல் உள்ளத்து பொய்யாது ஒழுகும் சான்றோர்கள் முதுமொழிக்காஞ்சியில் முக்கியத்துவம் பெறவில்லை. மாறாக தவறுகளைக் கண்டு மௌனமாக இருப்பவர்களையும் பிழை பொறுப்பவர்களையும் சான்றோர்கள் என முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுகின்றது. (மு.மொ.கா.27) ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒவ்வொரு நாட்டிற்கும் என பலவிதமான கலாசாரப் பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன. ஒரு தேசத்தின் அல்லது ஒரு சமூகத்தின் கலாசாரத்தினை இன்னொரு தேசத்தின் அல்லது சமூகத்துடன் ஒப்பிட்டு இது இவ்வளவு உயர்வானது அல்லது இவ்வளவு தாழ்வானது எனக் கூற முடியாது. ஒவ்வொரு கலாசாரமும் ஒவ்வொரு சமூகமும் தனக்குரிய கலாசார பழக்கவழக்கங்களுக்காகப் பல்வேறு காரணங்களைக் கொண்டிருக்கலாம். இவ்வடிப்படையில் சான்றோர்கள் வேறு தேசத்து கலாசாரப் பழக்கவழக்கங்களை தவறு என விமர்சிக்க மாட்டார்கள் என முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுகின்றது. (‘அறியா தேசத்து ஆசாரம் பழியார்’- மு.மொ.கா.28) இவ்வகையில் ஒரு கலாசாரத்தையோ அல்லது சமூகத்தையோ இன்னொரு கலாசாரம் மற்றும் சமூக நோக்கிலிருந்து விமர்சிப்பதும் குறைவாக மதிப்பிடுவதும் சரியானதாக அமையாது என்ற சார்பு நிலை உண்மையினை அறிந்தவர்களாக ஆரம்ப காலத் தமிழர்கள் இருந்திருக்கின்றார்கள் என்பதை முதுமொழிக்காஞ்சி வெளிப்படுத்துகின்றது. கலாசாரம் தொடர்பாக இத்தகைய நோக்கினை பின் நவீனத்துவம் மற்றும் பிற்கட்டமைப்பு வாதம் போன்ற தற்காலத் தத்துவக் கொள்கைகள் விளக்குவது குறிப்பிடத்தக்கது.

### 3.6.ஆன்மீக ஒழுக்கக் கருத்துக்களும் முதுமொழிக்காஞ்சியும்

அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருள்களில் அறம் எனும் போது துறவறமும் அதனை அடிப்படையாகக் கொண்ட சொர்க்கமும் விடுதலையும் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

முதுமொழிக்காஞ்சியின் ஒழுக்கக் கருத்துக்கள் பெரும்பாலும் உலகியல் வாழ்க்கைச் சார்ந்து காணப்பட்டாலும் ஆன்மீகம் சார்ந்த கருத்துக்களையும் முதுமொழிக்காஞ்சி எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது.

கடவுள் அல்லது அதற்கு சமமான சொல்லை முதுமொழிக்காஞ்சியின் 100 பாடங்களிலும் காணமுடியவில்லை என்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. கடவுள் முக்கியத்துவம் பெறாத ஒரு ஆன்மீக ஒழுக்க வாழ்க்கையினை முதுமொழிக்காஞ்சி எடுத்துரைக்கின்றது. ஒரு மனிதன் தனது தகுதிக்கு ஏற்ப தவம் செய்ய வேண்டும் எனவும், ஆன்மீக நிலையில் உயர்நிலையினை அடைய விரும்புபவனுக்கு தவம் அவசியமானது, மறுப்பிறப்புள்ளது என்ற உண்மையினை ஒருவன் முதிய பருவத்தில் உணர்ந்து செயல்படுதலே சிறந்த மூப்பு எனவும் முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுகிறது. (மு.மொ.கா.49,50,94) கணவன்-மனைவி சேர்க்கை குழந்தை பெறுவதற்காக அமைய வேண்டுமே தவிர சிற்றின்பத்தை அனுபவிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கக் கூடாது என்ற கருத்தினை முன்வைக்கும் முதுமொழிக்காஞ்சி, குழந்தை பெற்றுக் கொள்வதற்காக அல்லாமல் இடம்பெறும் கணவன் - மனைவி சேர்க்கையினை ஆரோக்கியமற்ற நிலையாகக் கருதுகின்றது. கணவன் - மனைவி சேர்க்கை குழந்தை பெறுவதை தவிர்த்து இடம் பெறும் போது கணவன் - மனைவியின் உடல் உள ஆரோக்கியத்தைப் பாதிப்பதாக அமையும் எனக் குறிப்பிடும் முதுமொழிக்காஞ்சியின் இக்கருத்து பொருள் முதல் வாதச் சிந்தனைக்கு உட்பட்டதாக இருப்பதுடன் பௌதீக அதீத அடிப்படையினைக் கொண்டுள்ளது என்று உறுதியாக கூறமுடியாமல் உள்ளது.

‘வாய்ப்புடை விழைச்சின் நல்விழைச்சு இல்லை’

‘வாயா விழைச்சில் தீவிழைச்சு இல்லை.’ (மு.மொ.கா. 53, 54)

பொருள்முதல்வாத மற்றும் இன்ப வாதக் கருத்துக்களை அங்கீகரிக்கும் முதுமொழிகாஞ்சி குழந்தைப் பேற்றுக்காக மட்டும் இடம் பெறும் கணவன் -மனைவி சேர்க்கையினை நல்லது எனவும் அவ்வாறு அல்லாதது தீமையானது எனக் கருதுவது நூலில் காணப்படும் முரண்பாடான தன்மையினை வெளிப்படுத்துவதுடன் திருக்குறள் கூறுவது போல் இன்பத்தை ஒழுக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகின்றது. (அறத்தால் வருவதே இன்பம-குறள.39.) இத்தகைய கருத்து சங்க கால மக்களின் பொருள் முதல் வாதக் கருத்துக்களுக்கு முரணனானது என்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக் காட்டாக, சங்க காலத்தில் ஒரு தலைவன் பிணி,மூப்பு மற்றும் சாக்காடு போன்ற நிலையற்றத் தன்மைகளுக்கு அஞ்சாமல் இன்ப வாழ்வில் மூழ்கி இருக்கும் காட்சியினை ஒரு புலவர் பின்வருமாறு சித்திரிக்கின்றார்.

“ …ஆராக் கூற்றம்!

நின்வரவு அஞ்சலன் மாதோ;

…பொலங்கலத்து ஏந்தி,

அமிழ்து என மடுப்ப மாந்தி, இகழ்விலன்,

நில்லா உலகத்து….” (புறம். 361)

பௌத்த மதத்தில் கணவன் -மனைவி சேர்க்கை என்பது குழந்தைப் பேற்றுக்காக மட்டுமே இருக்க வேண்டும் என்ற கருத்து டோனபிராமண சூத்திரத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மேலும் இத்தகைய கருத்து முதுமொழிக்காஞ்சி என்ற நூலானது அது எழுந்த காலத்தில் காணப்பட்ட பல்வேறுப்பட்ட மற்றும் ஒன்றுக்கும் மேற்பட்ட தத்துவ சித்தாந்தக் கருத்துகளின் தொகுப்பு என்ற பதிவினை ஏற்படுத்துவதாக இருக்கின்றது..

அறம் பொருள் இன்பம் எனும் உட்பொருட்கள் பற்றி முதுமொழிக்காஞ்சி எடுத்துரைத்த போதிலும் இவ்வுலக இன்பமான காமம் ஒரு நோக்கில் அங்கிகரிக்கப்பட்டாலும் மற்றுமொரு நோக்கில் குறைத்து மதிப்பிடப்படுவதையோ அல்லது ஒழுக்கத்தால் கட்டுப்படுத்தபடுவதையோ காணக் கூடியதாக உள்ளது. முதுமொழிக் காஞ்சியின் ஆன்மீக மற்றும் ஒழுக்க நோக்கிலும் கருத்துக்களிலும் பௌத்த தத்துவக் கருத்துக்களின் செல்வாக்கினை காணமுடிகிறது. ஒழுக்க சீலங்களான பஞ்சசீலங்கள் முதுமொழிக் காஞ்சியில் ஆங்காங்கே விரவிக் கிடப்பது தொடர்பாக ஏற்கனவே கூறப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் அவா(நசை) என்ற எண்ணக்கரு பற்றியும் அதன் எதிர்மறைத் தன்மை பற்றியும் அதிகம் ஆராயும் தத்துவமாக பௌத்தம் காணப்படுகின்றது. இந்நோக்கினை பிரதிபலிப்பதாக முதுமொழிக் காஞ்சியின் அவா தொடர்பான கருத்துக்கள் காணப்படுகின்றன. அவா (அதிக ஆசை) உடையவன் எவ்வளவு பொருள் கொடுத்தாலும் திருப்தி அடைய மாட்டான். இது அவாவின் இயல்பாகும். இத்தகைய அவாவினை வறுமைக்கு ஒப்பிடுகின்றது முதுமொழிக்காஞ்சி. இந்த அடிப்படையில் அவாவினைக் காட்டிலும் பெரிய வறுமை இல்லை என முதுமொழிக்காஞ்சி குறிப்பிடுகின்றது. உளவியல் ரீதியாக அவாவினை வறுமையுடன் ஒப்பிட்டு நோக்கும் தன்மையினை முதுமொழிக்காஞ்சி பௌத்தத்திடம் இருந்து பெற்றிருக்க அதிக வாய்ப்புள்ளது. (மு.மொ.கா. 57) இறப்புக்கு உட்படக் கூடிய சித்தார்த்தனாக இருந்த புத்தரை அழிவற்ற புத்தராக மாற்றிய நான்கு உயர்ந்த காட்சிகளை( முதியவர், நோயுற்றவர், இறந்தவர் மற்றும் தவசி அல்லது துறவி) பௌத்த சமயத்தினர் குறிப்பிடுவர். இந்நான்கு காட்சிகளுடன் தொடர்புபட்ட பண்புகளை முதுமொழிக்காஞ்சி கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(மூப்பு, பிணி,சாக்காடு மற்றும் தவம் - மு.மொ.கா. 39,77,56,70) ஒருவனது தவத்திற்கு மனத்தூய்மை இன்றியமையாத ஒன்றாகும். ஒரு துறவியின் துறவறத்தின் தன்மையினை அவனது மனத்தூய்மையே தீர்மானிக்கின்றது. முதுமொழிக்காஞ்சியின் இக்கருத்து திருக்குறளின் ‘மனத்துக்கண் மாசிலன் ஆதல்’-(குறள்.-34) என்ற வரிகளை ஞாபகப்படுத்துகின்றது. (மு.மொ.கா.70) இவ்வுலக மக்கள் புகழ்வதற்குரிய செயல்களைச் செய்ய விரும்புபவர்களுக்கு சொர்க்கம் மிக எளிதாக விடும் என்ற கருத்தினை முதுமொழிக்காஞ்சி எடுத்துரைக்கின்றது. (மு.மொ.கா.71) இவ்வகையில் இவ்வுலக விழுமியமான புகழ் முக்கியத்துவப்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் அவ்வுலக விழுமியமான சொர்க்கம் தீர்மானிக்கப்படுவது பொருள்முதல் வாத விழுமியத்தினையும் ஆன்மிக விழுமியத்தினையும் இணைக்கும் முயற்சியாக நோக்க முடியும்.

ஒரு விடயத்தில் ஆரம்பத்தில் துன்பங்களை எதிர் கொள்பவன் பின்னால் இன்பத்தை பெறுவான், துன்பங்களை ஆரம்பத்திலேயே தவிர்ப்பவன் இன்பம் பெறுவது கடினமாகும், அவனுக்கு துன்பமே விளையும் என்ற கருத்தினை முதுமொழிக்காஞ்சி முன் மொழிகின்றது. (மு.மொ.கா. 75,76) மேற்குறிப்பிட்ட கருத்து பொருள் முதல் வாத வாழ்க்கைக்கும் ஆன்மீக வாழ்க்கைக்கும் பொருந்தக் கூடியதாகும்.

### 3.7. பொதுவுடைமை ஒழுக்கமும் முதுமொழிக்காஞ்சியும்

இன்று உலகில் வளர்ந்து வரும் பல நாடுகளில் உணவுப் பிரச்சினை முக்கியமான ஒரு பிரச்சினையாக மாறி வருகின்றது. ஆரம்பக்கால தமிழர்கள் பகிர்ந்துண்ணும் வழக்கத்தினை தமது முக்கிய ஒழுக்கமாகக் கொண்டிருந்தனர். இதனை சங்க இலக்கியங்களிலும் சங்கமருவிய கால இலக்கியங்களிலும் காணமுடிகிறது. குறிப்பாக திருக்குறளில் இவ்வொழுக்கத்தைக் காணமுடிகிறது. (குறள்.227.) முதுமொழிக்காஞ்சியும் இவ்வொழுக்கத்தை தனது பல செய்யுள்களில் வெளிப்படுத்தியுள்ளது. பிறர் துன்பத்தை தன் துன்பம் போலக் கருதும் ஆரம்பக் காலத் தமிழர்களின் உளப்பாங்கினை இது வெளிப்படுத்துகின்றது. பிறர் துன்பத்தை தன் துன்பம் போல் கருதுபவர்களுக்கு பகிர்ந்துண்ணல் எளிது, தனது செல்வத்தை பிறருக்கு பகிராது தானே அனுபவிப்பவன் உண்மையில் பணக்காரன் இல்லை, பிறர்நலனுக்காக ஒருவன் படும் துன்பம் உண்மையில் துன்பம் அல்ல அது இன்பம் போன்ற முதுமொழிக்காஞ்சியின் கருத்துக்கள் (மு.மொ.கா.79,40,47)ஒழுக்கவியலில் காணப்படும் கொள்கையான பிறர்நலவாதக் கொள்கை மற்றும் பொதுவுடமைக் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றது.

### 4.முடிவுரை

முதுமொழிக்காஞ்சி எழுந்த காலம் சங்க காலத்தைத் தொடர்ந்த சங்கம் மருவிய காலமாக (அறநூற் காலம்) இருந்த போதிலும் இந்நூல் அதிக அளவுக்கு ஆன்மீகம் சார்ந்த ஒழுக்க சீலங்களைக் காட்டிலும் உலகியல் சார்ந்த ஒழுக்க சீலங்களைப் பற்றிப் பேசுவது குறிப்பிடத்தக்கது. இந்நூலில் திருக்குறள், நாலடியார் போல் அறம் பொருள் இன்பம் சார்ந்த கருத்துக்கள் வகையீடின்றிக் கலந்து காணப்படுவது மற்றுமோர் குறிப்பிடத்தக்க விடயமாகும். திருக்குறளைப் போல் இல்லறம்-துறவறம் என்ற வகையீட்டினையும் இந்நூலில் காணமுடியவில்லை. இந்நூல் பெரும்பாலும் முக்கியத்துவமுடைய சங்க கால தமிழர்களின் ஒழுக்க சீலங்களை எடுத்துரைப்பதுடன் (ஈகை, பகிர்ந்துண்ணல், சான்றாண்மை, நட்பு) பௌத்தமதத்தின் செல்வாக்கினையும் மறைமுகமாக வெளிப்படுத்துகின்றது. சங்க மருவிய காலத் தமிழர்களின் பகுத்தறிவு சார்ந்த மற்றும் யதார்த்த பூர்வமான ஒழுக்கச் சிந்தனைகளை முன்வைப்பது முதுமொழிக்காஞ்சியின் சிறப்பம்சமாகும். இந்திய தத்துவ சிந்தனையின் அடிப்படைப் பண்பாக காணப்படும் இல்லறம்-துறவறம், உலகியல்-ஆன்மீகம் என்ற அடுக்கமைவு வேறுபாட்டின் இடைவெளியினைப் பெருமளவுக்கு இந்நூல் குறைக்க முயற்சித்துள்ளது எனலாம். ஆன்மீகம் சார்ந்த கருத்துக்களில் ஒரு வகை நடுவு நிலைமை தன்மையினைப் பேண இந்நூல் பெருமளவுக்கு முயன்றுள்ளமையினை அதன் ஆன்மீகம் சார்ந்த கருத்துக்களும் அவற்றை வெளிப்படுத்தும் வடிவங்களும் உணர்த்துகின்றன.

## 5. துணை நூல் பட்டியல்

**தமிழ் ஆய்வு மூலங்கள்**:

அன்புமணி (2007) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சென்னை: மணிமேகலை பிரசுரம்

இராசாராம், துரை (உரையா.) (1995) பதினெண் கீழ்க்கணக்கு( தெளிவுரை), தொகுதி-3, சென்னை: முல்லை நிலையம்

கேசிகன், புலியூர் (உரையா.)(1961) மணிமேகலை (தெளிவுரை), சென்னை: பாரி நிலையம்

கேசிகன், புலியூர்(உரையா.)(1963) புறப்பொருள் வெண்பாமாலை(தெளிவுரை), சென்னை: பாரி நிலையம்

சரவணன்,ப. (பதிப்.) (2004) நாலடியார், சென்னை: சந்தியா பதிப்பகம்.

சிதம்பரனார்,சாமி (2003) பதினெண்கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும், சென்னை: அறிவுப்பதிப்பகம்

தண்டபாணி தேசிகர், ச. (தொகுப்.) (1950) திருக்குறள்-உரைவளம், அறத்துப்பால், : தருமபுர ஆதீனம்

நாராயணவேலுப்பிள்ளை,எம். (2000) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சென்னை: நர்மதா பதிப்பகம்

பரிமணம், அ.மா.&பாலசுப்பிரமணியன்,கு.வே. (பதிப்.) (2004)புறநானூறு மூலமும் உரையும், புத்தகம் I&II சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

வேங்கட சாமி, சீனி.(1940) பௌத்தமும் தமிழும், சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

**ஆங்கில ஆய்வு மூலங்கள்:**

Frankena,W.K.(1989) Ethics, New Delhi: Prentice-Hall of India.

Radhakrishnan,S.(1950) The Dhammapada, New Delhi: Oxford University Press

Sharma, Chandradhar(2003) A Critical Survey of Indian Philosophy, Delhi: Motilal Banarisidass Publishers

Subrahmanian, N.(1996) The Tamils( Their History, Culture and Civilization, Madras: Institute of Asian Studies

Tachibana,S( 1926) The Ethics of Buddhism, London : Clarendon Press.

Vaiyapuripillai, S.(1988) History of Tamil Language and Literature, Madras: New Century Book House

**இணைய தள மூலங்கள்**

ABuddhaUjja|Doṇabrāhmaṇasutta(a-buddha-ujja.hu),Availableat:https://a.buddha-ujja.hu/an-5192/en/sujato(Accessed:03 October 2021)

Vanamamalai,N.(1973 ) Materialist Thought in Early Tamil Literature , Social Scientist, (Vol.2. No.4, Nov.,1973) pp.25-41, Available at: http:// www.jstor.org/stable/3516360( Accessed: 03 October 2021)